ஈவிகேஸ்.இளங்கோவன் மறைவால் காலியான

ஈரோடு கிழக்கு தொகுதியில் பிப்.5ம் தேதி இடைத்தேர்தல்

● தேர்தல் ஆணையம் அறிவிப்பு ● நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது

ஈரோடு, ஜன. 8: ஈவிகேஎஸ். இளங்கோவன் மறைவால் காலியான ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்கு வருகிற பிப்.5ம் தேதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்து உள்ளது. இதையொட்டி, நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வந்தது.

தமிழ்நாட்டில் கடந்த 2021ல் நடந்த சட்டமன்ற தேர்தலின்போது, ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் திமுக கூட்டணியில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் திருமகன் ஈவெரா வெற்றி பெற்றார். அவர், கடந்த 2023 ஜனவரி 4ம் தேதி உடல்நலக்குறைவால் மரணமடைந்தார். இதையடுத்து ஈரோடு கிழக்கு தொகுதிக்கு 2023 பிப்ரவரி 27ம் தேதி இடைத்தேர்தல் நடந்தது.

இதில் திமுக கூட்டணி சார்பில் காங்கிரஸ் வேட்பாளராக திருமகன் ஈவெராவின் தந்தையும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான ஈவிகேஎஸ். இளங்கோவன் போட்டியிட்டு 1 லட்சத்து 10 ஆயிரத்து 156 வாக்குகள் பெற்று, 66,233 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் தென்னரசு 43,923 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார்.

இந்நிலையில், ஈவிகேஎஸ்.இளங்கோவன் உடல்நலக்குறைவால் சென்னை மருத்துவமனையில் கடந்த மாதம் 19ம் தேதி மரணம் அடைந்தார். இதைத் தொடர்ந்து, ஈரோடு கிழக்கு தொகுதி காலியானதாக தமிழ்நாடு சட்டப்பேரவை செயலகம் அறிவித்திருந்தது. இதையடுத்து ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் எப்போது வேண்டுமானாலும் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டு வந்தது. இந்நிலையில், தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் நேற்று ஈரோடு கிழக்கு தொகுதிக்கு இடைத்தேர்தல் வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெறும் என அறிவித்தார்.

இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதால், உடனடியாக தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன. தேர்தல் நடத்தும் அதிகாரியாக மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா வும், தேர்தல் நடத்தும் அலுவலராக மாநகராட்சி ஆணையர் மனிஷ் நியமிக்கப்பட்டனர். தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததால், கட்சி தலைவர்களின் புகைப்படம், சிலைகள், பெயர், விளம்பர பலகைகள் போன்றவற்றை மறைக்கும் பணி தொடங்கியது. குறிப்பாக, மாநகராட்சி அலுவலகத்தில் மேல் பகுதியில் வைக்கப்பட்டிருந்த மாநகராட்சி அலுவலகம் எம்ஜிஆர் மாளிகை என்ற பெயர் பலகை துணியால் மூடப்பட்டது.

மாநகராட்சி வளாகத்தில் இருந்த பல்வேறு கல்வெட்டுகளும் அகற்றப்பட்டும், பேப்பர் கொண்டும் மூடப்பட்டன. கிழக்கு தொகுதிக்குட்பட்ட சாலைகளில் இருந்த அரசியல் சுவரொட்டிகள், கொடி கம்பங்கள் அகற்றப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டன. அதனை அகற்றும் பணியில் மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள மேயர் நாகரத்தினம் மற்றும் துணை மேயர் செல்வராஜ் ஆகியோரின் அறைகள் பூட்டி சீல் வைக்கப்பட்டன.

அவர்களின் வாகனங்கள் திரும்ப பெறப்பட்டு அரசிடம் ஒப்படைக்கப்பட்டன. தொகுதிக்கு உட்பட பல்வேறு பகுதிகளில் போலீசார் வாகன சோதனை தொடங்கி உள்ளனர். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதையடுத்து திமுக கூட்டணி, அதிமுக, பாஜ உள்ளிட்ட கட்சியினர் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு, வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை உள்ளிட்ட பணிகளை தொடங்கி உள்ளனர்.

இடைத்தேர்தல் அட்டவணை

வேட்பு மனுதாக்கல் துவக்கம்	ஜன.10
மனு தாக்கல் செய்ய கடைசி நாள்	ஜன.17
வேட்பு மனு பரிசீலனை	ஜன.18
வாபஸ் பெற கடைசி நாள்	ஜன.20
வாக்குப்பதிவு	பிப். 5
வாக்கு எண்ணிக்கை	பிப்.8

4 ஆண்டில் 3வது தேர்தல்

ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளில் மிகவும் சிறிய தொகுதியாக இருப்பது ஈரோடு கிழக்கு தொகுதியாகும். இந்த தொகுதி கடந்த 2008 தொகுதி மறுசீரமைப்பின் போது புதிதாக உருவாக்கப்பட்டது. 2021ம் ஆண்டு சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெற்றது. பின்னர் 2023ல் இடைத்தேர்தல் நடைபெற்றது. தற்போது 2024ல் மீண்டும் இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. 4 ஆண்டுகளில் இத்தொகுதி 3வது தேர்தலை சந்திக்கிறது.

3 நாட்கள் மட்டுமே மனு தாக்கல்

ஈரோடு கலெக்டரும், மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரியான ராஜகோபால் சுன்கரா நேற்று மாலை நிருபர்களிடம் கூறியதாவது: இடைத்தேர்தலில் போட்டியிடுபவர்களின் வேட்பு மனுக்கள் மாநகராட்சி அலுவலகத்தில் வரும் 10ம் தேதி முதல் 17ம் தேதி வரை பெறப்படும். இதில், அரசு விடுமுறை நீங்கலாக, 10, 13, 17 ஆகிய 3 நாட்கள் மட்டுமே வேட்பு மனுத்தாக்கல் செய்ய வாய்ப்பு உள்ளது. ₹50 ஆயிரத்திற்கு மேல் ரொக்கப்பணம், மொத்தமாக பரிசு பொருட்கள் போன்றவை எடுத்து சென்றால், உரிய ஆவணங்கள் தேவை. உரிய ஆவணங்கள் இல்லையென்றால் பறிமுதல் செய்யப்படும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் உணர்திறன் திட்டத்திற்கு எதிர்ப்பு

▶ ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் உணர்திறன் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வால்பாறையில் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன.

வால்பாறை, ஜன.8: ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் உணர்திறன் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வால்பாறையில் கடையடைப்பு போராட்டம், ஆர்ப்பாட்டம் நடந்தது.

கோவை மாவட்டம் ஆனைமலை புலிகள் காப்பகத்தை சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்திற்கான வரைவு அறிவிப்பை ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

ஒன்றிய வன அமைச்சகத்தால் 36 நாட்களுக்கு முன் அறிவிக்கப்பட்ட இந்த சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டல வரைவு அறிவிப்பு தமிழ்நாட்டின் 183 கிராமங்களை அதிரவைத்துள்ளது. உரம், பூச்சி மருந்து, கட்டிட மேம்பாடு, கட்டிட பழுது நீக்கம், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு பணிகளில் இடையூறு ஏற்படும் வகையில் சட்டங்கள் மற்றும் வழிகாட்டல் நெறிமுறைகள் இந்த வரைவு ஆணையில் உள்ளன.

ஒன்றிய அரசின் இந்த வரைவு ஆணை தமிழ்நாடு மலை கிராமங்களில் பதற்றத்தையும், பீதியையும் அதிகரித்து உள்ளது. அறிவிப்பு தினத்திலிருந்து 60 நாட்களுக்குள் பொதுமக்கள் ஆட்சேபனை தெரிவிக்கலாம் என்றும் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் துறையால் வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பு வெளியாகி 35 நாட்கள் முடிவுற்றுள்ளது. வால்பாறை மற்றும் ஆனைமலை புலிகள் காப்பக எல்லையோரங்களில், ஆனைமலை முதல் கொடைக்கானல் வரை ஆட்சேபனை தெரிவிக்க பல தரப்பினரும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்திற்கான வரைவு அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும், ஒன்றிய மற்றும் மாநில அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும், ஆழியார் முதல் வால்பாறை வரை உள்ள மக்கள் பயன்படுத்தும் சாலையை இந்த சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலத்திற்கான வரைபடத்தில் இருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்தியும், புலிகள் காப்பகத்தின் வெளி வட்ட பகுதிக்குள்ளாகவே கேரளாவைப்போல முடித்துக் கொள்ள வேண்டும் என கேட்டும் ஜன 7ம் தேதி கடையடைப்பு மற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என வால்பாறை உரிமை மீட்பு குழுவினர் தெரிவித்திருந்தனர்.

வால்பாறையில் கடையடைப்பு; ஆர்ப்பாட்டம்

அதன்படி நேற்று வால்பாறை, சோலையாறு அணை, முடீஸ் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஆயிரக்கணக்கான கடைகள் அடைக்கப்பட்டன. பெட்டிக்கடைகள், மளிகை கடைகள், ஜவுளி கடைகள், டீக்கடைகள், ஓட்டல்கள் அடைக்கப்பட்டிருந்தன. இந்த போராட்டத்துக்கு வாகன ஓட்டுநர் சங்கம், தேயிலை தோட்ட தொழிற் சங்கங்கள், வியாபாரிகள் சங்கத்தினர் ஆதரவு தெரிவித்தனர்.

ஆட்டோக்கள், கார்கள், வேன்கள் இயக்கப்படவில்லை. அரசு பஸ்கள் மட்டும் இயக்கப்பட்டன. கடையடைப்பு மற்றும் போராட்டம் காரணமாக வால்பாறை சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டன. கடையடைப்பு போராட்டத்தையொட்டி வால்பாறை காந்தி சிலை அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் ஏராளமான தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

துணைவேந்தர் நியமனத்தில் ஆளுநருக்கு அதிகாரம்

உயர்கல்வி கட்டமைப்புகளை சீர்குலைக்கும் நடவடிக்கை

திரும்ப பெறாவிட்டால் போராட்டம்; பேராசிரியர் சங்கம் அறிவிப்பு

சேலம், ஜன.8: தமிழகத்தில் பல்கலைக்கழகங்களுக்கான புதிய துணைவேந்தரை நியமிக்க, அந்தந்த பல்கலைக்கழகங்களின், ஆட்சிக்குழு மற்றும் ஆட்சிப்பேரவை பிரதிநிதிகள் அடங்கிய தேடுதல் குழு அமைக்கப்படும். மேலும், இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக பல்கலைக்கழக சாசன விதிகளுக்கு ஏற்ப, மாநில அரசின் பிரதிநிதி அல்லது பல்கலைக்கழக வேந்தரான ஆளுநரின் பிரதிநிதி நியமிக்கப்படுவார்கள். தமிழகத்தை பொறுத்தவரை மாநில அரசுக்கு எதிராக செயல்பட்டு வரும் ஆளுநரால், பல்வேறு பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிக்க முடியாத நிலை உள்ளது. இந்நிலையில், துணைவேந்தர் நியமனத்தில் ஆளுநருக்கு அதிகாரம் வழங்கி, பல்கலைக்கழக மானியக்குழு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் (ஏயுடி) பொதுச் செயலாளர் பாலமுருகன் மற்றும் பெரியார் பல்கலைக்கழக தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் சக்திவேல் ஆகியோர் கூறியதாவது: ஒவ்வொரு பல்கலைக்கழகங்களும் தனித்தனி சாசன விதிகள் வகுக்கப்பட்டு, தமிழக சட்டமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி தான் நியமனங்கள் நடைபெற வேண்டும். ஆனால், ஒன்றிய அரசு நாடு முழுவதும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களை தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் பொருட்டு, இது போன்ற அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறது.

நாட்டிலேயே உயர் கல்வி கட்டமைப்பில் தமிழ்நாடு தான் சிறந்து விளங்குகிறது. இதனை சீர்குலைக்கும் வகையில் பல்கலைக்கழக மானியக்குழுவின் அறிவிப்பு உள்ளது. துணைவேந்தர் நியமனம் மட்டுமின்றி, பேராசிரியர் உள்ளிட்ட பிற பணியாளர்கள் நியமனத்தில் தலையீடு, இடஒதுக்கீடு விவகாரத்தில் நுழைவது என பல்வேறு பாதகமான அம்சங்கள், தற்போதைய யுஜிசியின் வழிகாட்டுதல்களில் உள்ளன. இதைஉடனடியாக திரும்ப பெற வேண்டும். இல்லாவிட்டால், பல்வேறு பல்கலைக்கழகங்களின் ஆசிரியர்கள் மற்றும் தொழிலாளர்களை திரட்டி, சென்னையில் மிகப்பெரிய போராட்டங்களில் ஈடுபடுவோம். இவ்வாறு தெரிவித்தனர்.

கல்வி நிறுவனங்களுக்கு மறைமுக மிரட்டல்

பல்கலைக்கழகங்களின் சாசன விதி மற்றும் மாநில அரசின் கொள்கைகளை சிதைக்கும் வகையில் தற்போதைய பல்கலைக்கழக மானியக்குழுவின் அறிவிப்பு உள்ளது. ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் அதன் கட்டமைப்பு, பணியாளர் ஊதியம் உள்ளிட்டவற்றிற்கு ஆண்டுக்கு தலா ₹6 கோடி முதல் ₹30 கோடி வரை, தமிழக அரசுதான் வழங்கி வருகிறது. அதேசமயம், கடந்த 2012க்கு பிறகு மானியக்குழு எந்தவித நிதியையும் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கவில்லை.

முழுக்க, முழுக்க மாநில அரசு கட்டிக்காத்து வரும் உயர் கல்வி நிறுவனங்களில், ஒன்றிய அரசின் கொள்கைகளை திணிப்பது கேலிக்கூத்தானது. மேலும், இதனை பின்பற்றா விட்டால், யுஜிசி அங்கீகாரம் ரத்து, பாடம் நடத்த முடியாது, தேர்வுகளை நடத்தி சான்றிதழ்களை வழங்க முடியாது என்பது போன்ற மிரட்டல்களை மறைமுகமாக மானியக்குழு விடுத்துள்ளது. எனவே, இதனை ஆரம்ப நிலையிலேயே தடுத்து நிறுத்த வேண்டும் என பேராசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேலூர் எம்பி கல்லூரியில் அமலாக்கத்துறை மீண்டும் சோதனை

வேலூர், ஜன.8: வேலூர் எம்பி கதிர் ஆனந்துக்கு சொந்தமான கல்லூரியில் அமலாக்கத்துறையினர் நேற்று மீண்டும் சோதனை நடத்தினர்.

வேலூர் எம்பி கதிர் ஆனந்துக்கு சொந்தமான வீடு, அவருக்கு சொந்தமான கல்லூரி மற்றும் உறவினரான பூஞ்சோலை சீனிவாசன் வீடு, அவரது உறவினர் தாமோதரன் வீடு ஆகிய 4 இடங்களில் கடந்த 3ம் தேதி. 12 பேர் கொண்ட அமலாக்கத்துறை அதிகாரிகள் சட்டவிரோத பணப்பரிமாற்றம் சட்டத்தின் கீழ் சோதனையை தொடங்கினர். இந்த சோதனை கடந்த 5ம் தேதி அதிகாலை 2.15 மணியளவில் நிறைவடைந்தது.

இந்நிலையில் நேற்று மீண்டும் சோதனை நடத்துவதற்காக மதியம் 1 மணியளவில் அமலாக்கத்துறையினர் காட்பாடி காவல் நிலையத்தில் கடிதம் அளித்தனர். இதை தொடர்ந்து பகல் 1.15 மணியளவில் 8 பேர் கொண்ட அமலாக்கத்துறை அதிகாரிகள், வேலூர் எம்பிக்கு சொந்தமான கல்லூரியில் நுழைந்தனர். உடனடியாக நுழைவு கேட் மூடப்பட்டது. இதனால் காட்பாடியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு
இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில் வேளச்சேரி, சென்னை-42.
போன்.044-35971950.
மறு டெண்டர் / பொது ஏலம் அறிவிப்பு எண்.03 / நாள் : 08.01.2025

சென்னை-42, வேளச்சேரியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமாக, கீழ்க்கண்ட விவரப்படி உள்ள காலி நிலங்களை வணிக நோக்கில் பயன்படுத்திக்கொள்வதற்கான மறு டெண்டர்/ பொது ஏலம் சென்னை மண்டலம்-II, உதவி ஆணையர், வேளச்சேரி சரக ஆய்வர், திருக்கோயில் செயல் அலுவலர் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது. ஏல விபரம் பின்வருமாறு.

வ. எண்	ஏல விவரம் (நிலம் அமைவிடம் தெருவின் பெயர்)	பழைய புல எண்	புதிய புல எண்	விஸ்தீரணம் (சதுர அடியில்)	முன்வைப்புத் தொகை ரூ.
1	லஸ்சுமிநகர் 5-வது மெயின் ரோடு	493 / Pt	87	25672 ச.அ	ரூ.16.87,000/-
2	தண்டீஸ்வரம் நகர் 3-வது மெயின் ரோடு	206 / Pt	8	66414 ச.அ	ரூ.55.59.000/-

1. ஒப்பந்தப்புள்ளி / பொது ஏலம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் : 23.01.2025 வியாழன் கிழமை மாலை 3.00 மணிக்கு
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெறப்படுவதற்கான விவரம் : டெண்டர் படிவங்களை 08.01.2025 முதல் 22.01.2025 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை சென்னை-42, வேளச்சேரி அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
3. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான நாள், நேரம் மற்றும் இடம் : 23.01.2025. பிற்பகல் 2.30 மணிக்குள் சென்னை-42, வேளச்சேரி அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில் அலுவலகத்தில் வைக்கப்படுமென்ற டெண்டர் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும். தாமதமாக வரும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள், இடம்,நேரம் : 23.01.2025/ செயல் அலுவலர் அலுவலகம், அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயில், வேளச்சேரி, சென்னை-42 / மாலை 3.00 மணி
5. பொது ஏலம் விவரம்: ஏலதினத்தன்று முன்வைப்புத் தொகையை 3.00 மணிக்குள் ஏலம் துவங்குவதற்கு முன்னதாக செலுத்தி நேரடியாகவும் பங்கு பெறலாம்
ஒப்பந்தப்புள்ளி படிவம், நிபந்தனை மற்றும் தொடர்பான விவரங்களையும் மற்றும் பொது ஏலம் தொடர்பான நிபந்தனைகளையும் திருக்கோயில் அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில் நேரில் அணுகி தெரிந்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது

க.விஜயன் தக்கார் | செ.ம.தொ.இ / 16 / வரைகலை / 2025 | வ.சக்தி செயல் அலுவலர் (கூ.பொ)

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகப்பட்டினம் அவர்களால் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள 3 ஒன்றியங்களில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2025-26ன் கீழ் சாலைகள் மேம்பாடு பணிக்கான மின் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. (இரு உறை முறையில்)
1. ஒப்பந்தப்புள்ளி எண் ந.க.3012/சி8/2024
2. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
3. நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் அவர்களால் மின் ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறை முறை மூலம் வரவேற்கப்படுகிறது.
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 10.01.2025 - காலை 10.00 மணி முதல் 24.01.2025 மாலை 3.00 மணி வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. பொதுவான ஒப்பந்தப்புள்ளி குறித்த நாள் மற்றும் நேரம்:
(i) மின்ஒப்பந்த ஆவணம் பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் மற்றும் நேரம் : 24.01.2025 மாலை 3.00 மணி
(ii) மின்ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 24.01.2025 - மாலை 3.00 மணி
(iii) மின்ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 24.01.2025 - மாலை 4.00 மணி

செ.ம.தொ.இ.83/ஒப்பந்தப்புள்ளி/2025 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகப்பட்டினம்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (ஐ.எப்.பி)–(இரண்டு உறை) மின்னணு ஒப்பந்தம் முறையில்

ஒப்பந்தப்புள்ளி கேட்பு எண்.	22 / கோ. ITB சிவகங்கை/ வ.அ 1 / ஒ பி / 2024/ நாள் : 06.01.2025
நிதி	வைப்பு நிதி
ஒப்பந்தக்காரர் தகுதி	முதல் வகுப்பு ஒப்பந்தக்காரர்கள் (சிவில்)
ஒப்பந்தப்புள்ளி வரவேற்பவர்	தலைமைப் பொறியாளர், த.கு.வ.வா., மதுரை, தமிழ்நாடு
ஒப்பந்தப்புள்ளி படிவம் பதிவிறக்கம்	09.01.2025 முதல் 23.01.2025, 15.00 மணி வரை
ஒப்பந்தபுள்ளி முன் வைப்புத்தொகை	Online முறையில் இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக
ஒப்பந்தப்புள்ளி முன் ஆய்வுக்கூட்டம்	13.01.2025 அன்று 11.00 மணி தலைமைப்பொறியாளர் அலுவலகம்,த.கு.வ.வா., மதுரை
ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	23.01.2025 அன்று 15.00 மணிக்குள் மின்னணு ஒப்பந்தம் முறையில் டிஜிட்டல் ஒப்பம் இடப்பட்டு இணையதளம் "https://tntenders.gov.in" மூலமாக
ஒப்பந்தப்புள்ளி திறப்பு	24.01.2025 அன்று 15.30 மணிக்கு மின்னணு ஒப்பந்தம் முறையில்

திட்டத்தின் பெயர்	பணியின் உத்தேச மதிப்பு (ச.ம.சே.வரி 18% உட்பட.)	முன்வைப்பு தொகை
சிவகங்கை மாவட்டம் – சிவகங்கை கூட்டுக் குடிநீர் திட்டத்தில், பாப்பாகுடியில் அமைந்துள்ள திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் தரைமட்ட தொட்டியிலிருந்து இலுப்பைக்குடி ITB காவல் நிலைய வளாகத்தில் அமைந்துள்ள ஆட்கள் தேர்ந்தெடுக்கும் பயிற்சி மையத்திற்கு தொழிற்சாலைகளுக்கான குடிநீர் ஒதுக்கீட்டிலிருந்து 100 கனமீற்றர் வைப்பு நிதியைக்கொண்டு தினசரி 3.00 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் வழங்கும் திட்டம். (பணிக்காலம் – 9 மாதங்கள் + சோதனை ஓட்டம் – 3 மாதங்கள் மற்றும் கட்டண பராமரிப்பு–12 மாதங்கள்)	ரூ.2.20 கோடி	ரூ.1.65 இலட்சம்

செ.ம.தொ.இ/ 85 /ஒப்பந்தப்புள்ளி/2025 | தலைமைப் பொறியாளர், த.கு.வ.வாரியம், மதுரை
தேவை இத்தருணம் – குடிநீர் சிக்கனம்

CHENNAI METRO RAIL LIMITED
(A Joint Venture of Govt. of India & Govt. of Tamil Nadu)
(ISO 9001:2015 AND ISO 14001:2015 CERTIFIED)
METROS, Anna Salai, Nandanam, Chennai - 600 035

EMPLOYMENT NOTIFICATION No: CMRL/HR/CON/01/2025 dated 08-01-2025.

CMRL invites applications from qualified & experienced women personnel for appointment of under mentioned posts on contract basis: -

Name of the Post	No. of Post	Consolidated Pay (Per Month)	Min Exp. (Yrs.)	Max Age (Yrs.)
AM (Civil)	8	Rs.62,000/-	2	30

Note:
i. The detailed employment notification will be published in CMRL website vide URL: https://chennaimetrorail.org. on or before 10-01-2025.
ii. Salary is negotiable for deserving candidates
iii. Last date for receipt of application is 10-02-2025.

DIPR/10/Display/2025 | Chief General Manager (HR & Legal)

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
திருப்பத்தூர் மாவட்டம்
திட்டம்: ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வரிவருவாய் திட்டம் SCPAR (2024-25)
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
ந.க.எண். இ1/4554/2024
இனவாரியான ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (இரண்டு உறை முறை)
1. முழுமையான விவரங்களுக்கு, www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. திருப்பத்தூர் மாவட்ட இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், ஊரக வளர்ச்சி முகமை அவர்களால் முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்டுதல் பணிக்கு மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 10.01.2025 முதல் 24.01.2025 காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்
(i) மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 24.01.2025 மாலை 3.00 மணி வரை
(ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 24.01.2025 மாலை 5.00 மணி வரை

செ.ம.தொ.இ.84/ஒப்பந்தப்புள்ளி/2025 | இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருப்பத்தூர் மாவட்டம்

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் : சிறப்பு திட்டக் கோட்டம் II
சென்னை, நெற்குன்றத்தில் வணிகம் மற்றும் அலுவலக வளாகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஏலத்திற்கான அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் 1 | நாள்: 07.01.2025

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சிறப்பு திட்டக் கோட்டம் II க்கு உட்பட்ட புல எண். 388 பகுதி, நெற்குன்றம் கிராமம், சென்னை மாவட்டம், சென்னையில் உள்ள வணிக மற்றும் அலுவலக வளாகம் (2 அடித்தளம் + தரைத்தளம் + 4 தளங்கள்) (TAISHA வளாகம் அருகில்) மின்னணு முறை மூலம் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் வாயிலாக வாடகைக்கு விடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வணிகம் மற்றும் அலுவலக வளாகம் தொடர்பான விவரங்கள் மற்றும் ஏனைய விதிமுறைகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் www.tnhb.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்.
1. ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏனைய ஆவணங்களுக்கு https://tntenders.gov.in-ல் தெரிந்துகொள்ளவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கும் காலம் மற்றும் சமர்பிக்கப் படுவதற்கான நாள் மற்றும் நேரம் 08.01.2025 காலை 11.00 மணி முதல் 07.02.2025 காலை 11.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 07.02.2025 காலை 11.30 மணிக்கு.

அலுவலக முகவரி :– செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர், சிறப்பு திட்டக் கோட்டம்–II
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், திருமங்கலம், சென்னை 600 101.
☎ 044–26157557 கைபேசி: 7904190911 | செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலர், சிறப்பு திட்டக் கோட்டம்–II
செ.ம.தொ.இ./14/வரைகலை/2025

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்
CIN: U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47வது தளம், என்.சி. கேல்கர் மார்க்,ஆர்.ஜி.கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028
மின்னஞ்சல்: KARTHI.GOVINDASAMY@OMKARAARC.COM
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி எம் எண்:+91–93446 84194/98840 62068 / 99623 33307

[இணைப்பு – IV–A]
[விதி 8 (6)ஃw 9(1) விதியைப் பார்க்கவும்]
அசையாச் சொத்துக்களின் மின்–ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு
பாதுகாப்பு நலன்களின் விதி 8 (6) ஃw 9(1) இன் விதிமுறையுடன் படிக்கப்பட்ட நிதிச் சொத்துகளின் பத்திரமாக்கல் மற்றும் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டம், 2002 (''SARFAESI சட்டம்'') அமலாக்கத்தின் கீழ்
அசையாச் சொத்துகளை விற்பனை செய்வதற்கான ஏ